**மார்ச் – 10**

# TNPSC துளிகள்

- கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் அவரது உத்தி சார் தலைமைத்துவம் மற்றும் முக்கிய உதவியை அங்கீகரிக்கும் விதமாக இந்தியப் பிரதமருக்கு "Honorary Order of Freedom of Barbados" வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய சட்ட சேவை அதிகாரியான அஞ்சு ரதி ராணா, சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தில் சட்டத் துறைச் செயலாளராக நியமிக்கப்பட்ட முதல் பெண்மணி ஆகியுள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மக்காச்சோளத்திற்கான சந்தை வீதவரி

- மக்காச்சோளத்தின் மீது விதிக்கப்படும் 1% சந்தை வீத வரியினை தமிழக அரசு ரத்து செய்துள்ளது.
- இது 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்தல் (ஒழுங்கு முறை) சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படுகிறது.
- தமிழ்நாடு முழுவதும் சுமார் 4 லட்சம் ஹெக்டேர்கள் பரப்பளவில் மக்காச்சோளம் பயிரிடப் படுகிறது மற்றும் அதன் உற்பத்தி சுமார் 29 லட்சம் மெட்ரிக் டன் ஆகும்.





## 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பு 2025-26

- 8வது பொருளாதாரக் கணக்கெடுப்பினை எளிதாக்குவதற்காக வேண்டி தமிழ்நாடு அரசு மாநில மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை அமைத்துள்ளது.
- இது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
- பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆனது, ஒரு மாநிலத்திற்குள் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களின் முழுமையான எண்ணிக்கையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாடு முழுவதுமான 7வது பொருளாதாரக் கணக்கெடுப்பு ஆனது 2019 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டாலும் மேற்கு வங்காளம் பங்கேற்கவில்லை.
- 6வது பொருளாதாரக் கணக்கெடுப்பின் அகில இந்திய அறிக்கையின்படி (2013-14 ஆம் ஆண்டிற்கு இடையில் சேகரிக்கப்பட்டத் தரவுகள்), தமிழ்நாட்டில் 8.60% நிறுவனங்கள்


இருந்தது என்பதோடு இது நாட்டின் மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கையில் நான்காவது இடத்தில் உள்ளது.

- நாட்டின் மொத்த வேலைவாய்ப்பில் தமிழ்நாடு 8.91% பங்குடன், நாட்டின் மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் நான்காவது இடத்தில் உள்ளது.
- நாட்டில் அதிகபட்சமாக பெரிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் (13.81%) பதிவாகியுள்ளன.
- தமிழ்நாடானது, பெண் தொழில்முனைவோரின் தலைமையின் கீழ் உள்ள வணிக நிறுவனங்களின் எண்ணிக்கையில் மிகப்பெரிய பங்கினை (13.51%) கொண்டுள்ளது.
- அதைத் தொடர்ந்து கேரளா (11.35%), ஆந்திரப் பிரதேசம் (10.56%), மேற்கு வங்காளம் (10.33%) மற்றும் மகாராஷ்டிரா (8.25%) உள்ளன.




# தேசியச் செய்திகள்


## GSI மையத்தின் புதிய முன்னெடுப்புகள்




- இந்தியப் புவியியல் ஆய்வு மையம் (GSI) ஆனது, சமீபத்தில் அதன் 175வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்த நிகழ்வின் போது, களம் சார் தரவு கையகப்படுத்துதல் செயலி மற்றும் 'புவிராசத்' எனப்படும் புவி சார்ந்த பாரம்பரியச் செயலி என இரண்டு குறிப்பிடத்தக்க எண்ணிம முயற்சிகளை அறிமுகப் படுத்தியுள்ளது.

- இந்த முன்னெடுப்புகள் ஆனது, தரவுச் சேகரிப்பு செயல்திறனை மேம்படுத்துவதையும் இந்தியாவின் வளமான புவி சார் பாரம்பரியம் குறித்ததொரு பெரும் விழிப்புணர்வை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

## 5வது மின் தொழிலாளிகள் தினம்




- மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆனது, டாடா பவர்-DDL நிறுவனத்துடன் இணைந்து 5வது மின் தொழிலாளிகள் தினத்தினைக் கொண்டாடியது.
- இந்தத் தினமானது, இந்தியாவின் மின்சாரத் துறையில், மின் தொழிலாளிகள் மற்றும் நிலக் கட்டுப்பாட்டுப் பராமரிப்பு ஊழியர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்கிறது.
- மத்திய மின்சார ஆணையம் (CEA) ஆனது, இந்தியாவில் மின்சாரத் துறை திட்டமிடல், மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறைகளை மேற்கொள்வதற்கான பெரும் பொறுப்பினைக் கொண்டுள்ள ஒரு சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இது மின்சாரக் கொள்கை மற்றும் பல்வேறு தொழில்நுட்பத் தரநிலைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குகிறது.


# சர்வதேசச் செய்திகள்

## கொத்து வெடிமருந்துகள் தொடர்பான உடன்படிக்கை- லிதுவேனியா

- ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக எழுந்துள்ள பாதுகாப்பு சார்ந்த கவலைகளைக் காரணம் காட்டி, லிதுவேனியா நாடானது கொத்து வெடிமருந்துகள் தொடர்பான உடன்படிக்கையிலிருந்து (CCM) அதிகாரப்பூர்வமாக விலகியது.
- இந்த உடன்படிக்கையில் இருந்து விலகிய முதல் நாடு லிதுவேனியா ஆகும்.
- CCM ஆனது 2008 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது (அது 2010 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்தது).
- இது கொத்து வெடிமருந்துகளைப் பயன்படுத்துதல், பரிமாற்றுதல், உற்பத்தி செய்தல்


மற்றும் சேமித்து வைப்பதைத் தடை செய்கிறது.

- ❖ இந்த ஒப்பந்தத்தில் 112 நாடுகள் மற்றும் 12 பிற கையொப்பமிட்ட நாடுகள் உள்ளன.
- ❖ இந்தியா இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை.
- ❖ ரஷ்யாவோ அல்லது உக்ரைனோ இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடவில்லை.
- ❖ கொத்து குண்டுகள் என்பது ஒரு பெரிய பகுதியில் பல சிறிய குண்டுகள் அல்லது வெடி மருந்துகளை வெளியிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட வெடிக்கும் ஆயுதங்கள் ஆகும்.




# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் பாலின வேலைவாய்ப்பு முரண்பாடு அறிக்கை





- ❖ கடந்த ஆறு ஆண்டுகளில் (2017-18 முதல் 2023-24 வரை) நகர்ப்புறப் பகுதி இந்தியாவில் பெண்களின் வேலைவாய்ப்பு ஆனது 10% அதிகரித்துள்ளது.
- ❖ ஆனால் 2023-2024 ஆம் ஆண்டில், 89 மில்லியனுக்கும் அதிகமான நகர்ப்புற இந்தியப் பெண்கள் இன்னும் தொழிலாளர் சந்தையில் பங்கேற்காமல் உள்ளனர்.
- ❖ இந்த 89 மில்லியன் ஆனது ஜெர்மனி, பிரான்சு அல்லது ஐக்கியப் பேரரசின் மக்கள் தொகையை விடவும், ஆஸ்திரேலியாவை விட மூன்று மடங்கு அதிகமாகவும் உள்ளது.

- இதற்கிடையில், நகர்ப்புற இந்தியாவில் இளம் ஆண்களின் வேலைவாய்ப்பின்மை ஆனது பெண்களை விட அதிகமாக உள்ளது (20-24 வயதுடையவர்களுக்கு 10% மற்றும் 7.5%).

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கிராசோலாபியம் த்ரிட்டியே – ஒடிசா





- ஒடிசா மாநிலத்தின் கியோஞ்சர் மாவட்டத்தின் தக்காண தீபகற்ப உயிரிப் புவியியல் மண்டலத்தில் மண்ணில் வாழும் உருளைப் புழு இனத்தை அறிவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- விலங்கியல் மற்றும் வகைப்பிரித்தல் என்ற ஆராய்ச்சிக்கு இந்திய விலங்கியல் ஆய்வு அமைப்பின் (ZSI) தலைவர் டாக்டர் த்ரிதி பானர்ஜியின் மிகப்பெரும் பங்களிப்புகளை அங்கீகரிக்கும் விதமாக, கிராசோலாபியம் த்ரிட்டியே என்ற இனத்திற்கு பெயரிடப் பட்டுள்ளது.
- இந்தியாவில் ஒன்பது இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்தக் கண்டுபிடிப்பு ஆனது, உலகளவில் அறியப்பட்ட கிராசோலாபியம் வகை உயிரினங்களின் மொத்த எண்ணிக்கையை 39 ஆக உயர்த்துகிறது.
- இந்த நுண்ணிய உயிரினங்கள் ஆனது, மண் ஆரோக்கியத்திற்கு நன்கு உதவுவதோடு, ஊட்டச்சத்து சுழற்சி மற்றும் கரிமப் பொருள் சிதைவில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

# மாநிலச் செய்திகள்

## தன்னாட்சி நிர்வாக சபை குறித்த அசாம் மாநிலத்தின் திருத்த மசோதா

- ஏழு தன்னாட்சி நிர்வாகச் சபைகள் தொடர்பான திருத்த மசோதாக்களை அசாம் மாநிலச் சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- தேர்தல்களை நடத்துவது "நடைமுறைக்கு மாறானது" எனக் கண்டறியப்பட்டால், இந்த அமைப்புகளின் செயல்பாட்டை ஆளுநரே மேற்கொள்வதற்கு இது அங்கீகாரத்தினை அளிக்கிறது.

- இந்த அமைப்புகளை நிர்வகிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் சபையின் பதவிக் காலத்தினை அதிகபட்சமாக ஓராண்டுக்கும் மேலாக நீட்டிக்கும் விதிமுறை உள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட சபையின் வழக்கமான பதவிக் காலம் ஆனது ஐந்து ஆண்டுகள் ஆகும்.




## விளையாட்டுச் செய்திகள்

### டேபிள் டென்னிஸ் - ஷரத் கமல்





- இந்தியாவின் புகழ்பெற்ற டேபிள் டென்னிஸ் வீரரான அச்சந்தா ஷரத் கமல், தொழில் முறை டேபிள் டென்னிஸ் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- ஐந்து முறை ஒலிம்பிக்கில் பதக்கம் பெற்றவரும், இந்தியாவின் மிகவும் உயர்ந்தத் தர

வரிசையில் உள்ள டேபிள் டென்னிஸ் வீரர், 2025 ஆம் ஆண்டு நிலவரப்படி உலகத் தர வரிசையில் 42வது இடத்தைப் பிடித்துள்ளார்.

- தேசிய ஒற்றையர் சாம்பியன்சிப் போட்டிகளில்ல் 10 முறைகள் பட்டம் பெற்ற இவர் இந்தியாவின் மிகவும் புகழ்பெற்ற டேபிள் டென்னிஸ் வீரர்களுள் ஒருவராக தனது இடத்தை உறுதிப்படுத்தியுள்ளார்.
- அவர் ஐந்து போட்டிகளில் மொத்தமாக 13 பதக்கங்களைப் பெற்று காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு சாதனையைப் படைத்துள்ளார்.
- 2022 ஆம் ஆண்டு பர்மிங்காம் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மூன்று தங்கங்கள் மற்றும் ஒரு வெள்ளி உட்பட நான்கு பதக்கங்களைப் பெற்றுள்ளார்.

# முக்கிய தினங்கள்

## உலக பல் மருத்துவர் தினம் - மார்ச் 06




- இத்தினமானது, மக்கள் நல்ல வகையில் வாய்வழி சுகாதாரத்தைப் பேணுவதற்கான நினைவூட்டலாகச் செயல்படுகிறது.
- கி.மு. 2600 ஆம் ஆண்டில் பண்டைய எகிப்து நாட்டில் பாரோ ஜோசரின் தலைமை பல் மருத்துவராகப் பணியாற்றிய ஹெசி-ரா என்பவர்தான் முதல் பல் மருத்துவர் ஆவார்.
- பல் மருத்துவத்தினை மட்டுமே மையமாகக் கொண்ட முதல் புத்தகம் ஆனது, 1530 ஆம் ஆண்டில் ஜெர்மனி வெளியிடப்பட்டது.
- லூசி பீமன் ஹாப்ஸ் 1866 ஆம் ஆண்டில் உரிமம் பெற்ற முதல் பல் மருத்துவர் ஆவார்.
- மார்ச் 06 என்ற தேதியானது, 1840 ஆம் ஆண்டில் டாக்டர் ஹோரேஸ் வெல்ஸால் செயல் விளக்கப்பட்ட முதல் நவீன பல் மருத்துவ நடைமுறையின் ஆண்டு நிறைவு தினமாகும்.

# இதரச் செய்திகள்

## NIF அறக்கட்டளையின் 25 வது ஆண்டுவிழா

- இந்தியத் தேசியக் கண்டுபிடிப்பு அறக்கட்டளையானது (NIF) மார்ச் 01 ஆம் தேதியன்று அதன் வெள்ளி விழா கொண்டாட்டத்தைத் தொடங்கியது.
- NIF நூற்றுக்கணக்கான NIF-ஆதரவு நிறுவனங்களுக்கும் 25க்கும் மேற்பட்ட அடிமட்டப் புத்தொழில் நிறுவனங்களுக்கும் உதவுகிறது, அவற்றில் சில ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய்க்கு மேல் விற்பனையை மேற்கொள்கின்றன.

- 2000 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த NIF ஆனது, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன், சில அடித்தளக் கண்டுபிடிப்புகள் மற்றும் பாரம்பரிய அறிவை ஊக்குவிக்கிறது.




## உலகின் மிகவும் விலையுயர்ந்த கால்நடை




- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஒரு பசுவானது, உலகின் மிகவும் விலையுயர்ந்த கால்நடையாக உள்ளது.
- 2023 ஆம் ஆண்டு பிரேசிலின் மினாஸ் ஜெரைஸில் நடைபெற்ற ஏலத்தில் வியாடினா-19 என்ற பசுவானது 40 கோடி ரூபாய்க்கு மேலான விலையில் விற்கப்பட்டது.
- இந்தப் பசுவின் எடை சுமார் 1,101 கிலோவாகும் என்பதோடு இது நெல்லூர் இனத்தைச் சேர்ந்த மற்ற பசுக்களின் சராசரி எடையை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.
- ஓங்கோல் இனம் என்றும் அழைக்கப்படுகின்ற இந்த வியாடினா-19 ஆனது நெல்லூர் இனத்தைச் சேர்ந்ததோடு இது முதன்முதலில் 1800 ஆம் ஆண்டுகளில் பிரேசிலுக்கு கொண்டு வரப்பட்டது.
- இந்த வியடினா-19 ஆனது, டெக்சாஸின் ஃபோர்ட் வொர்த் நகரில் நடைபெற்ற "உலக சாம்பியன்" போட்டியில் மிஸ் தென் அமெரிக்கா பட்டத்தினை வென்றது.
- வெப்பமண்டலப் பருவநிலைக்கு ஏற்ற ஒரு தகவமைப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி போன்ற அதன் திறனுக்காக நெல்லூர் இனம் நன்கு அறியப்பட்டதாகும்.
- பிரேசில் நாடானது, தற்போது நெல்லூர் கால்நடைகளை அதிகளவில் இனப்பெருக்கம்

செய்யும் உலகின் மிகப்பெரிய நாடாகும்.

- இந்த வகை இனம் ஆனது அர்ஜென்டினா, பராகுவே, வெனிசுலா, மத்திய அமெரிக்கா, மெக்சிகோ, அமெரிக்கா மற்றும் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.
- பிரேசிலில் உள்ள பசுக்களில் குறைந்தது 80 சதவீதம் ஆனது ஜெபு கால்நடைகள் ஆகும் என்ற நிலையில் இது இந்தியாவில் தோன்றிய ஒரு கிளையினமாகும் என்பதோடு இது அதன் திமில் மற்றும் அசை தாடி ஆகியவற்றினால் வேறுபடுத்தி பார்க்கப்படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★